# வன்னிப்பிரதேச பெண் புனைகதை எழுத்தாளர்கள் ஓர் ஆய்வு

செல்வி. விக்னேஸ்வரி இராமசாமி

பதிவிலக்கம்: EU/IS/2008/AC/265

சுட்டிலக்கம்: CS 3665

கிழக்குப் பல்கலைக்கழக, கலை கலாசாரபீட மொழித்துறையில் தமிழ்ச் சிறப்புக் கற்கை நெறியின் ஒரு பகுதியை நிறைவு செய்யும் பொருட்டு இவ்வாய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கப்படுகிறது.

06 MAR 2015

மொழித்துறை,

கலை கலாசாரபீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்,

வந்தாறுமூலை, இலங்கை.

2014

# வன்னிப்பிரதேச பெண் புனைகதை எழுத்தாளர்கள் ஓர் ஆய்வு

## பொருளடக்கம்


உறுதியுரை

முன்னுரை

நன்றியுரை

01 அத்தியாயம் ஒன்று (2–5)

1.0 ஆய்வு அறிமுகம்
- 1.1 ஆய்வுத் தலைப்பு
- 1.2 அறிமுகம்
- 1.3 ஆய்வு நோக்கம்
- 1.4 ஆய்வு எல்லை
- 1.5 ஆய்வு மூலங்கள்
  - 1.5.1 முதல் நிலைத்தரவுகள்
  - 1.5.2 இரண்டாம் நிலைத்தரவுகள்
- 1.6 ஆய்வுப் பிரச்சினை
- 1.7 ஆய்வு முறையியல்

02 அத்தியாயம் இரண்டு (7–28)

2.0 புனைகதைகள்: தோற்றமும் வளர்ச்சியும்
- 2.1 புனைகதை: அறிமுகம்
- 2.2 தமிழில் புனைகதைகள்
  - 2.2.1 தமிழ் நாவல் தோற்றமும் வளர்ச்சியும்
  - 2.2.2 தமிழ்ச் சிறுகதை தோற்றமும் வளர்ச்சியும்
- 2.3 ஈழத்தில் புனைகதைகள்
  - 2.3.1 ஈழத்தில் தமிழ்நாவல் தோற்றமும் வளர்ச்சியும்
  - 2.3.2 ஈழத்தில் தமிழ்ச் சிறுகதை தோற்றமும் வளர்ச்சியும்
- 2.4 வன்னிப்பிரதேச புனைகதைகள்: தோற்றமும் வளர்ச்சியும்
  - 2.4.1 கிளிநொச்சி
  - 2.4.2 முல்லைத்தீவு
  - 2.4.3 வவுனியா
  - 2.4.4 மன்னார்

03 அத்தியாயம் மூன்று (30-40)

3.0 வன்னிப்பிரதேச பெண் புனைகதை எழுத்தாளர்கள்: அறிமுகம்

3.1 கிளிநொச்சி

3.1.1 தாமரைச்செல்வி

3.1.2 மலரன்னை

3.2 வவுனியா

3.2.1 யாமினி சிவராமலிங்கம்

3.2.2 நெலோமி அன்ரனி குரூஸ்

3.2.3 நந்தீஸ்வரி துரைராசா

3.2.4 மருதோடை நிலா

3.2.5 தமிழ்க்கவி

3.2.6 நிறைமதி

3.2.7 விஜயலட்சுமி இராசமனோகரன்

3.2.8 துசானி

3.3 மன்னார்

3.3.1 வெற்றிச்செல்வி

3.4 முல்லைத்தீவு

3.4.1 அனுசா கணேசலிங்கம்

3.5 வன்னியைத் தமது வாழிடமாகக் கொண்ட எழுத்தாளர்கள்

3.5.1 ஆதிலட்சுமி சிவகுமார்

3.5.2 மலைமகள்

## 04 அத்தியாயம் நான்கு (42-67)

4.0 வன்னிப்பெண் எழுத்தாளர்களது புனைகதைகள்: உருவமும் கதையாக்க உத்திகளும்

4.1 கதைத் தலைப்பு

4.2 கதைத் தொடக்கமும் முடிவும்

4.2.1 கதைத் தொடக்கம்

4.2.2 முடிவு

4.3 வர்ணனைப் பயன்பாடு

4.3.1 பாத்திர வர்ணனை

4.3.2 நிகழ்ச்சி வர்ணனை

4.4 கதைப்பின்னலும் எடுத்துரைப்பு முறைமையும்

4.5 பாத்திரப் படைப்பு

4.5.1 நனவோடை உத்திமுறை

4.6 மொழிநடை

4.6.1 வர்ணனை அழகியல்

4.6.2 உவமை அணிகள்

4.6.3 சிறப்புத் தொடர்களின் பயன்பாடு

4.6.4 கவித்துவ மொழிநடை

4.6.5 பேச்சுமொழிப் பயன்பாடு

## 05 அத்தியாயம் ஐந்து (69-128)

5.0 வன்னிப்பிரதேச பெண் எழுத்தாளர்களது புனைகதைகளின் உள்ளடக்கம்

பகுதி ஒன்று

5.1 சமூகப்பிரச்சினைகளும் பெண்களின் அனுபவவெளிப்பாடும்

5.1.1 சீதனப்பிரச்சினை

5.1.2 முதலாளி, தொழிலாளி வர்க்கச் சுரண்டல்கள் மற்றும் சமூக முரண்பாடுகள்

5.1.3 மனிதநேயம்

5.1.4 பெண்களின் மனவுணர்வுகள்

பகுதி இரண்டு

5.2 போர்ச்சூழலும் மக்கள் வாழ்வியலும்

5.2.1 உயிரிழப்பும் சொத்திழப்பும்

5.2.1.1 உயிரிழப்பு

5.2.1.2 சொத்திழப்பு

5.2.2 பொருளாதாரத் தடையும் போக்குவரத்துச் சிக்கல்களும்

5.2.2.1 பொருளாதாரத் தடை

5.2.2.2 போக்குவரத்துச் சிக்கல்

5.2.3 இராணுவக் கெடுபிடிகளும் உளப்பாதிப்புக்களும்

5.2.4 இடப்பெயர்வின் அவலங்கள்

5.2.4.1 வறுமை

5.2.4.2 தொழில்நிலை

5.2.5 விடுதலை உணர்வு

**06 அத்தியாயம் ஆறு (130-134)**

நிறைவுரை

**துணை நூற்பட்டியல்**

1. மூலநூல்கள்

அ. நாவல்கள்

ஆ. சிறுகதைத்தொகுதிகள்

இ. பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த சிறுகதைகள்

2. துணைநூல்கள்

**பின்னிணைப்புக்கள்**

வன்னிப்பிரதேச பெண் எழுத்தாளர்களது புனைகதை நூல்களின் அட்டைப்படங்கள்

# முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஈழத்து இலக்கிய வரலாற்றுக்கும் முக்கிய பங்குண்டு. ஈழத்து இலக்கியத்தினுள் புனைகதைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஈழத்துப் பெண் புனைகதை எழுத்தாளர்களின் படைப்புக்களை ஆய்வு செய்வதனூடாக ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் நிலை, பெண்கள் மீது திணிக்கப்படும் கட்டுப்பாடுகள் மற்றும் அவர்களது அனுபவங்கள், பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள், படைப்புக்களில் இவை வெளிப்படும் விதம் என்பனவற்றை அறிந்து கொள்வதுடன் ஈழத்துப் புனைகதைத் துறைக்குப் பெண்களின் பங்களிப்பு எத்தகையது என்பதனையும் அறிந்து கொள்ள முடிகின்றது. அந்தவகையில் "வன்னிப் பிரதேச பெண் புனைகதை எழுத்தாளர்கள் - ஓர் ஆய்வு" எனும் தலைப்பில் இவ்வாய்வு அமைகின்றது.

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பிரதேச பெண் எழுத்தாளர்களைப் பற்றியது இவ்வாய்வு. ஈழத்தில் வன்னிப்பிரதேச பெண் எழுத்தாளர்கள் 1990களுக்குப் பின் எழுதிய புனைகதைகள் முக்கியத்துவம் பெற்றனவாக அமைகின்றன. நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழலும் அதன் விளைவுகளும் புனைகதைகளில் வெளிப்படுத்தப்பட்ட போது இது அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. இச்சூழலை வன்னிப் பெண் படைப்பாளிகள் தமது படைப்புக்களில் வெளிப்படுத்தியமையால் ஈழத்துத் தமிழ்ப் புனைகதை வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்றனர். ஆனால் இவர்களது ஆக்கங்கள் பற்றிய ஆய்வுகள் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை. ஆதலால் இவ்வாய்வு முதன்மைப்படுத்தப்படுகின்றது.

இவ்வாய்வில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆய்வு பற்றிய அறிமுகம், அதன் நோக்கம், ஆய்வு எல்லை, ஆய்வு முறையியல் ஆகியவற்றையும், ஆய்வை மேற்கொள்கின்ற போது ஏற்பட்ட பிரச்சினைகள் என்பன முதலாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்படுகின்றது.

அத்தியாயம் இரண்டு புனைகதை பற்றிய அறிமுகத்தையும் தமிழிலக்கிய வரலாறு மற்றும் ஈழத்து இலக்கிய வரலாறு ஆகியவற்றில் புனைகதையின் தோற்றம் வளர்ச்சி என்பன எவ்வாறு அமைந்தன என்பது ஆய்வு செய்யப்படுகின்றது. அத்தோடு வன்னிப்பிரதேசத்தில் புனைகதை எத்தகைய வளர்ச்சியைக் கொண்டிருந்தது என்பது மாவட்ட அடிப்படையில் பகுத்து நோக்கப்படுகிறது.

அத்தியாயம் மூன்று வன்னிப்பிரதேசப் பெண் புனைகதையாளர்களின் அறிமுகமாக அமைகிறது. இப்பகுதில் கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்ட அடிப்படையில் புனைகதை எழுத்தாளரின் பிறப்பிடம், வாழிடம், எழுத்துலகப் பிரவேசம், பாராட்டுக்கள், விருதுகள் போன்ற விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவர்களது எழுத்து முயற்சிகளுக்கும் வெளியீட்டுக்கும் களமமைத்துக் கொடுத்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியன பற்றியத்

தகவல்கள் தரப்பட்டுள்ளன. இவ்வியலில் அவ்வவ் எழுத்தாளர்களது ஆக்கங்கள் பற்றிய தகவல்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது.

அத்தியாயம் நான்கு வன்னிப்பெண் எழுத்தாளர்களது புனைகதைகள்: உருவமும் கதையாக்க உத்திகள் என்பதாகும். இவ்வாய்வில் புனைகதைகளின் தலைப்பின் பொருத்தப்பாடு, கதையின் தொடக்கமும் முடிவும் அமையும் விதம், பாத்திர வர்ணனை, நிகழ்ச்சி வர்ணனை, கதைப்பின்னலும் எடுத்துரைப்பு உத்திகளும், பாத்திரப்படைப்பு, மொழிநடை என்பன பற்றி ஆய்வு செய்யப்படுகின்றது.

வன்னிப்பிரதேச பெண் எழுத்தாளர்களது புனைகதைகளின் உள்ளடக்கங்கள் என்பது அத்தியாயம் ஐந்தாக அமைகிறது. இவ்வத்தியாயம் இரு பகுதிகளாகப் பகுக்கப்படுகிறது. பகுதி ஒன்றில் சமூகப்பிரச்சினைகள் பெண்களின் அனுபவவெளிப்பாடுகள் என்பனவும், பகுதி இரண்டில் போர்ச்சூழல் மக்களின் வாழ்வியல் என்பனவும் ஆய்வு செய்யப்படுகிறது. அவற்றுள் சீதனப்பிரச்சினை, முதலாளி, தொழிலாளி வர்க்கச் சுரண்டல்கள் மற்றும் முரண்பாடுகள், மனிதநேயக் கருத்துக்கள், பெண்களின் மனஉணர்வுகள், என்பனவும், போரினால் ஏற்பட்ட உயிரிழப்பு, சொத்திழப்பு, பொருளாதாரத்தடை, போக்குவரத்துச் சிக்கல், இராணுவக் கெடுபிடிகள் அதனால் ஏற்பட்ட உளப்பாதிப்புக்கள், இடப்பெயர்வின் அவலநிலை, வறுமைநிலை, தொழில்நிலை மற்றும் விடுதலை உணர்வு போன்றனவும் விளக்கி ஆய்வு செய்யப்படுகின்றன.

அத்தியாயம் ஆறு இவ்வாய்வின் நிறைவுரையாக அமைகிறது. இவ்வியலில் ஈழத்துத் தமிழ்ப் புனைகதை வரலாற்றில் வன்னிப் பிரதேச பெண் எழுத்தாளர்களது புனைகதைகளின் முக்கியத்துவம் குறிப்பிடப்படுகின்றது. மேலும் இவ்வாய்வு முழுமையான தரவுகளுடன் இன்னும் ஆழமாகச் செய்யப்பட்ட வேண்டிய தேவையையும் வலியுறுத்துகின்றது.

எனவே இவ்வாய்வினூடாக புனைகதை வரலாற்றில் பெண்களின் பங்களிப்பினையும், முக்கியத்துவத்தினையும் அறிந்து கொள்ள முடிகின்றது. வன்னிப்பிரதேச பெண் எழுத்தாளர்களின் புனைகதைகள் ஈழத்துத் தமிழ்ப் புனைகதை வளர்ச்சிக்கு பங்காற்றும் விதத்தையும் இவ்வாய்வு வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஆய்வாளர்